# களம் தேர்வு – 07

1. **பிரித்தெழுதுக - எம்மருமை**

(A) எம்+மருமை (B) எ+மருமை (C) எ+அருமை (D) எம்+அருமை

2. **'விம்முகின்ற' என்பதின் வேர்ச்சொல் காண்க.**

(A) வி (B) விம் (C) விம்மு (D) வீ

3. **பிழையற்ற தொடரைக் காண்க.**

(A) தீங்கவிகளைச் செவியாறப் பருகச் செய்தார் .

(B) கற்போர் இதயம் கணியும் வன்னம் கவிதை இயற்றினார்.

(C) இன்றும் தமிழ்மொழியின் புகழ் எத்திசையும் இலங்குகிறது.

(D) காலத்தின் குரல்களாக தமிழ்மொழி வீருபெறுகிறது.

4. **பொருத்துக.**

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) Precision | - 1) இலக்கியத்தனம் | (A) | | 4 | 3 | 2 | 1 | 5 |
| b) Purport | - 2) கலைமுழுமை | (B) | | 3 | 4 | 5 | 1 | 2 |
| c) Poetic Inversion | - 3) உளப்பாடு | (C) | | 4 | 3 | 5 | 1 | 2 |
| d) Poeticalness | - 4) செறிவாக்கப்பட்டது | (D) | | 3 | 4 | 1 | 5 | 2 |
| e) artistic whole | - 5) கவிதை மறுதலைத்தொடர் | | | | | | | |

5. **'தன்னேர்' என்பதின் சரியான பிரித்தறிதலைக் காண்க.**

(A) தன்மை+ஏர் (B) தன்+நேர் (C) தன்+ஏர் (D) தன்+ஓர்

6. **கூற்றுகளை ஆராய்ந்து விடையளி.**

1. மயங்கொலி மெய்களில் ண், ன், ர், ல், ள், ழ் இவை மட்டுமே மொழிக்கு இறுதியில் வரும்.

2. ட், ற் என்னும் மெய்களை அடுத்து அவ்வெழுத்து வரிசைகளும் க, ச, த, ப என்னும் வரிசைகள் மட்டுமே வரும்

3. தனிச்சொற்களில் வல்லின உயிர்மெய் எழுத்திற்கு முன் வல்லின மெய்யோ அல்லது மெல்லின மெய்யோ இடம் பெறும்.

4. ணகர ஒற்றினை அடுத்து றகரமும் னகர ஒற்றினை அடுத்து டகரமும் இடம் பெறும்.

5. தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் வாரா.

(A) 1, 3, 5 தவறு (B) 2, 4, 5 தவறு (C) 1, 2, 4 தவறு (D) 2, 3, 4 தவறு

7. **மயங்கொலிச் சொற்களின் சரியான பொருளறிக.**

கிளி - கிலி

(A) அஞ்சுகம் - வேகம் (B) தத்தை - வீரம் (C) கிள்ளை - குற்றம் (D) சுகம் -பயம்

8. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.

(A) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

(B) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

(C) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

(D) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

9. இப்பாடலடிக்கு உரித்தானவர் யார்?

சொற்சங்கமாகச் சுவைமிகுந்த கவி கூட்டி

அற்புதங்களெல்லாம் அமைத்த பெருமாட்டி

(A) தாராபாரதி (B) முடியரசன் (C) கண்ணதாசன் (D) மக்கள் கவிஞர்

10. 'கவுள்' என்பதன் சரியான பொருளறிக.

(A) செதில் (B) முள் (C) உள்வாய் (D) தீங்கு

11. பிழையானத் தொடரைத் தேர்க.

1. குழந்தை சிரித்தான்
2. குழந்தை சிரித்தது
3. கதிரவன் உதித்தான்
4. கதிரவன் உதித்தது

(A) 2 & 3 (B) 1 & 4 (C) 1 & 3 (D) எதுவுமில்லை

12. கூற்று1 :- தமிழில் பால் பகுப்பு இலக்கண அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

கூற்று 2:- தன்மை, முன்னிலை, படர்க்கை போன்றவற்றில் விகுதிகள் பால்பகுப்பைக் காட்டுகின்றன.

(A) கூற்று 1, 2 சரி (B) கூற்று 1 சரி / 2 தவறு (C) கூற்று 1, 2 தவறு (D) கூற்று 1 தவறு / 2 சரி

13. தமிழில் ஐம்பால்களுள் பலர்பால் சொல் --------- உயர்வு கருதிச் சில வேளைகளில் ----- வந்துள்ளன. கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை நிரப்புக.

(A) ஒருமையிலும், ஒருமையிலும் (B) பன்மையிலும், பன்மையிலும்

(C) பன்மையிலும், ஒருமையிலும் (D) ஒருமையிலும், பன்மையிலும்

14. சரியான தொடர் எது / எவை?

1. மூன்று மனிதர்
2. நான்கு மனிதர்கள்
3. எட்டு தேங்காய்கள்
4. ஒன்பது தேங்காய்

(A) 1, 4 சரி (B) 2, 4 சரி (C) 1, 3 சரி (D) 3, 4 சரி

15. தமிழில் திணைப்பாகுபாடு ------ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

(A) பொருட் குறிப்பு (B) சொற்குறிப்பு (C) தொடர்க் குறிப்பு (D) எழுத்துக் குறிப்பு

16. 'குடும்பம்' என்னும் பொருள் தரும் சொற்களில் பொருந்தாதது எது?

1. குடும்பு
2. குடும்பை
3. கூடும்பு
4. கடும்பு

(A) 1 மட்டும் (B) 2 மட்டும் (C) 3 மட்டும் (D) 4 மட்டும்

17. கலைச்சொல் காண்க – Matrilocal

(A) தந்தை வழி (B) தாய் வழி (C) மகன் வழி (D) மகள் வழி

18. பொருத்துக.

a) அவன், அவள், அவர் - 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

b) நாங்கள் முயற்சி செய்வோம் - 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

c) நாம் முயற்சி செய்வோம் - 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்

d) நாங்கள், நாம் - 4) பதிலிடு பெயர்கள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

19. மயங்கொலிச் சொற்களின் சரியானப் பொருளறிக.

அலை, அளை, அழை

(A) நீர்த்திரை, புற்று, அழைப்பு (B) அலைதல், மது, குளம்

(C) தயிர், மிகுதி, நூல் (D) குகை, பொந்து, கரை

20. தமிழர் பரம்பரை வரிசையில் சரியாகப் பொருந்திய வரிசை எது?

(A) சேயோன், பரன், ஓட்டன், பூட்டன், பாட்டன். (B) ஓட்டி, பூட்டி, பறை, பாட்டி, தாய்.

(C) பரை, ஓட்டி, பூட்டி, பாட்டி, தாய். (D) பரன், சேயோன், ஓட்டன், பாட்டன்.

21. பிரித்தெழுதுக - நன்னுதல்.

(A) நன்மை+நுதல் (B) நன்+உதல் (C) நல்+நுதல் (D) நன்மை+உதல்

22. பிரித்தெழுதுக - எந்நாள்

(A) எந்த+நாள் (B) என்+நாள் (C) எ+நாள் (D) எந்த+ஆள்

23. சரியான பொருளைத் தேர்க.

உவா - இரவி

(A) நிலவு - பௌர்ணமி (B) சந்திரன் - கடல்

(C) யானை - அமாவாசை (D) சோமன் - சூரியன்

24. பிழையற்றத் தொடரைத் தேர்க.

(A) கடலூருக்கு அருகாமையில் புதுவை அமைந்துள்ளது.

(B) ஒவ்வொரு மரங்களும் இயற்கையைப் பாதுகாக்கின்றன.

(C) மிதிவண்டியில் சென்றவர் பேருந்து மோதி காயம்.

(D) காய்ச்சலில் உள்ளவனுக்கு சுடுதண்ணீர் கொடு.

25. திருக்குறளின் சிறப்புப்பெயர்களில் பொருந்தாதது எது?

(A) அறவிலக்கியம் (B) தமிழர் திருமுறை (C) தமிழர் வேதம் (D) உலகப்பொது மறை

26. பொருத்துக.

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) கடகம் | - | 1) முடிந்ததை | (A) | 5 | 1 | 4 | 3 | 2 |
| b) தெகஞ்சத | - | 2) மாவு அரைக்கும் கல் | (B) | 3 | 1 | 5 | 4 | 2 |
| c) கொராமுனுசு | - | 3) ஓலைப்பெட்டி | (C) | 3 | 1 | 4 | 5 | 2 |
| d) அனயம் | - | 4) கிராம நிர்வாக அலுவலர் | (D) | 5 | 4 | 1 | 3 | 2 |
| e) திருகை | - | 5) நிறைவானது | | | | | | |

27. பிழையுள்ளத் தொடரைத் தேர்க.

1. வளவன் அரிசிமாவில் செய்த பிட்டுத் தின்றான்.
2. எழிலன் இனிப்பின் ஒரு பகுதியைப் பிட்டு தின்றான்.
3. தலைவன் தலைவியிடம் தன் உள்ள கருத்தைக் கூறினான்.
4. ஆசிரியர் மாணவரிடம் தன்னிடம் உள்ளக் கருத்தைக் கூறினார்.

(A) 1, 3 (B) 2, 4 (C) 2, 3 (D) அனைத்தும்

28. கூற்று : அவன்பால் கொண்டு சென்றான்.

காரணம் : அவன் பசுவின் பாலைக் கொண்டு சென்றான்.

(A) கூற்று சரி, காரணம் சரி (B) கூற்று தவறு, காரணம் சரி
(C) கூற்று சரி, காரணம் தவறு (D) கூற்று தவறு, காரணம் தவறு

29. கூற்று : அவன் கூடக் கொடுத்தான்.

காரணம் : அவன் எனக்கு மிகுதியாகக் கொடுத்தான்.

(A) கூற்று சரி, காரணம் சரி (B) கூற்று சரி, காரணம் தவறு
(C) கூற்று தவறு, காரணம் சரி (D) கூற்று தவறு, காரணம் தவறு

30. பொருத்துக.

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) Archive | - | 1) ஓய்வறை | (A) | 3 | 1 | 5 | 4 | 2 |
| b) Lobby | - | 2) ஆணையுறுதி ஆவணம் | (B) | 3 | 1 | 5 | 2 | 4 |
| c) Conviction | - | 3) காப்பகம் | (C) | 5 | 1 | 3 | 4 | 2 |
| d) Affidavit | - | 4) சாட்டுரை | (D) | 5 | 1 | 3 | 2 | 4 |
| e) Allegation | - | 5) தண்டனை | | | | | | |

31. பெற்றறெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க – இப்பாடலின் ஆசிரியர் யார்?

(A) கவியரசு (B) மக்கள் கவிஞர் (C) பாலரேறு (D) நாமக்கல் கவிஞர்

32. ‘தெற்று’ என்பதன் பொருளறிக.

(A) கீற்று (B) தவறு (C) தெய்வம் (D) இனிமை

33. ‘அண்ணாவி’ என்பதன் சொற்பொருளில் பொருந்தாதது எது?

(A) அப்பாவி (B) புலவன் (C) ஆசிரியர் (D) தமையன்

34. சரியான இணைகளைக் காண்க.

1. ஊழியல் - 01 | 2. ஒழிபியல் - 13 | 3. அரசியல் - 32

4. களவியல் - 07 | 5. கற்பியல் - 18

(A) 1 இணை (B) 2 இணை (C) 3 இணை (D) 4 இணை

35. நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்

கல்லார்க் கொன்றாகிய காரணம் - இப்பாடலடி எந்நூல் சார்ந்தது?

(A) நாலடியார் (B) திருக்குறள் (C) மூதுரை (D) பழமொழி நானூறு

36. உ.வே.சா அவர்களுக்கு சென்னை பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கிய ஆண்டு?

(A) 1942 (B) 1932 (C) 1892 (D) 1936

37. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a) குழிமாற்று | - | 1) தாழைமடல் |
| b) சீதாள பத்திரம் | - | 2) பெருக்கல் வாய்பாடு |
| c) உபாத்தியாயர் | - | 3) கல்வித் தொடக்கம் |
| d) வித்தியாப்பியாசம் | - | 4) ஆசிரியர் |
| e) வித்தியாரம்பம் | - | 5) கல்விப் பயிற்சி |

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 | 5 |
| (B) | 5 | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 1 | 4 | 5 | 3 |
| (D) | 4 | 5 | 2 | 1 | 3 |

38. மகாமகோபாத்தியாய, திராவிட வித்தியா பூஷணம், தாஷிணாத்திய கலாநிதி - போன்ற பட்டங்களைப் பெற்றவர் யார்?

(A) உ.வே.சா (B) டி.கே.சி (C) தெ.பொ.மீ (D) கவியரசு

39. எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே - இக்கூற்றிற்கு உரிய ஆசிரியர் யார்?

(A) முன்னுறை அரையனார் (B) ஔவையார்

(C) நல்லாதனார் (D) கணிமேதாவியர்

40. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a) புலம்பு | - | 1) குளிர்ந்த கடல் |
| b) நளிர்கடல் | - | 2) பழி |
| c) கதழ் | - | 3) தனிமை |
| d) ஞமலி | - | 4) விரைவு |
| e) நிந்தை | - | 5) நாய் |
| | - | 6) வெப்பமானக் கடல் |

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 5 | 2 |
| (B) | 3 | 6 | 4 | 5 | 2 |
| (C) | 4 | 1 | 3 | 5 | 2 |
| (D) | 4 | 6 | 2 | 5 | 4 |

41. நேர மேலாண்மையோடு பொருந்தி வரும் உவமைத் தொடரைத் தேர்க.

(A) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

(B) காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு

(C) பருவத்தே பயிர் செய்

(D) அகல உழுவதை விட ஆழ உழுவதே சிறந்தது

42. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) Stamp pad | - | 1) மடிப்புத்தாள் | (A) | 2 | 3 | 1 | 4 |
| b) File | - | 2) மை பொதி | (B) | 3 | 1 | 4 | 2 |
| c) Folder | - | 3) இழுவை முத்திரை | (C) | 2 | 4 | 1 | 3 |
| d) Rubber Stamp | - | 4) கோப்பு | (D) | 3 | 4 | 1 | 2 |

43. தவறான சொல்லையும் பொருளையும் தேர்க.

(A) உததி - கிணறு (B) நிண்ணயம் - உறுதி (C) வாரிதி - கடல் (D) துஞ்சு - தங்கு

44. 'யானைபுக்க புலம்போல' - உவமைக்குப் பொருத்தமான தொடர் எது?

(A) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது

(B) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது

(C) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது

(D) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

45. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் இடம் பெறும் பெயரெச்சம் எது?

(A) உண்டு (B) பிறந்து (C) வளர்ந்த (D) இடந்தனில்

46. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) வானரம் | - | 1) பெண் குரங்கு | (A) | 3 | 1 | 4 | 2 |
| b) மந்தி | - | 2) சடை | (B) | 4 | 1 | 3 | 2 |
| c) பரி | - | 3) குதிரை | (C) | 4 | 1 | 2 | 3 |
| d) வேணி | - | 4) ஆண் குரங்கு | (D) | 3 | 4 | 2 | 1 |

47. "யானை புக்க புலம் போல" இத்தொடரில் இடம் பெறும் பெயரெச்சம் -------

(A) யானை (B) புக்க (C) புலம் (D) போல

48. 'காய்நெல்' என்ற சொல்லின் பொருள் யாது?

(A) விளைந்த நெல் (B) காய்ந்த நெல் (C) செறிந்த நெல் (D) அழிந்த நெல்

49. 'யாத்து' என்ற சொல்லின் எதிர்ப்பதம் யாது?

(A) பிரித்து (B) சேர்த்து (C) பெருக்கி (D) கழித்து

50. 'நந்தும்' என்ற சொல்லின் பொருள் யாது?

(A) ஒரு நில அளவு (B) முறைமை (C) அன்பு (D) தழைக்கும்

51. 'கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுபவர்' என்ற பாடலடி இடம் பெற்ற நூல்?

(A) நாலடியார் (B) நல்வழி (C) மூதுரை (D) கொன்றை வேந்தன்

52. கடலைக் குறிக்கும் சொற்களில் பொருந்தாததைத் தேர்க.

(A) அளம் (B) ஈண்டுநீர் (C) வலயம் (D) கச்சான்

53. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) நாகம் | - | 1) சுரபுன்னை | (A) | 3 | 2 | 4 | 1 |
| b) கோடியர் | - | 2) செறிவு | (B) | 2 | 3 | 1 | 4 |
| c) நாகு | - | 3) கூத்தர் | (C) | 3 | 1 | 4 | 2 |
| d) உறழ் | - | 4) இளமை | (D) | 1 | 3 | 4 | 2 |

54. எளியது, அரியது என்பன.

(A) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை

(B) சொல்வது - சொல்லியபடி செய்வது

(C) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு

(D) மெய்ப்பொருள் காண்பது - உருவுகண்டு எள்ளாதது

55. திண்ணியர் - என்பதன் பொருள் யாது?

(A) அறிவுடையவர் (B) தீயினத்தார்

(C) மெய்ப்பொருள் காண்பவர் (D) மன உறுதியுடையவர்

56. பொருத்துக.

a) பாம்போடு உடன் உறைந்தற்று - 1) தீக்காய்வார்

b) செத்தார் - 2) சீர் அழிக்கும் சூது

c) வறுமை தருவது - 3) கள் உண்பவர்

d) இகல் வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - 4) உடம்பாடு இலாதவர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

57. சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்

மாரிபோல் மாண்ட பயத்ததாம் - என்ற அடிகள் இடம் பெற்ற நூல் எது?

(A) திருக்குறள் (B) நாலடியார் (C) திரிகடுகம் (D) பழமொழி நானூறு

58. ஆராய்ந்து சொல்கிறவர் -------

(A) அரசர் (B) சொல்லியபடி செய்பவர் (C) தூதுவர் (D) உறவினர்

59. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) ஆமந்திரிகை | - | 1) பட்டத்து யானை | (A) | 3 | 1 | 4 | 2 |
| b) அரசு உவா | - | 2) மூங்கில் | (B) | 4 | 2 | 1 | 3 |
| c) கழஞ்சு | - | 3) இடக்கை வாத்தியம் | (C) | 1 | 2 | 3 | 4 |
| d) கழை | - | 4) எடை அளவு | (D) | 4 | 3 | 2 | 1 |

60. வேறுபட்ட ஒன்றைத் தேர்க.

(A) இருண்ட வீடு (B) எதிர்பாராத முத்தம் (C) வீரத்தாய் (D) மாங்கனி

61. காப்பியத்தை ஆங்கிலத்தில் EPIC என்பர். இது EPOS என்னும் ----- சொல்லிலிருந்து தோன்றியது.

(A) இலத்தீன் (B) கிரேக்கம் (C) அரபு (D) இத்தாலி

62. 'நித்திலம்' என்னும் சொல்லின் பொருள்.

(A) கணு (B) ஆடவர் (C) முத்து (D) புதுமை

63. காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள் யாது?

(A) போர்க்கருவி (B) தச்சுக்கருவி (C) இசைக்கருவி (D) வேளாண்கருவி

64. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று
பேசுவார்'- இத்தொடர் உணர்த்தும் பண்பு

(A) நேர்மறைப் பண்பு (B) எதிர்மறைப்பண்பு

(C) முரண் பண்பு (D) இவை அனைத்தும்

65. 'விளியறி ஞமலி'இதில் குறிப்பிடப்படும் விலங்கு.

(A) எருது (B) குதிரை (C) நாய் (D) யாளி

66. தவறான இணையைத் தேர்க.

(A) வேட்டம் - எருது (B) செறு - வயல்

(C) சாவம் - வில் (D) அள்ளல் - சேறு

67. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) ஐப்பசி | - 1) விளக்குத் திருவிழா | | (A) | 3 | 2 | 4 | 1 |
| b) மார்கழி | - 2) கடலாட்டு விழா | | (B) | 2 | 4 | 3 | 1 |
| c) மாசி | - 3) ஓணவிழா | | (C) | 3 | 4 | 2 | 1 |
| d) கார்த்திகை | - 4) திருவாதிரை விழா | | (D) | 4 | 3 | 2 | 1 |

68. பொருள் அறிக 'மடநல்லார்'

(A) விழாக்கள் நிறைந்த (B) எழுச்சி தரும் விழா

(C) திசைதோறும் பூசையிடுதல் (D) இளமை பொருந்திய பெண்கள்

69. நுகம் - என்பதன் பொருள் அறிக.

(A) பாரம் (B) கை (C) விரல் (D) உயரம்

70. 'மாவலிபுரச் செலவு' என்னும் தலைப்பில் கவிதையைப் படைத்தளித்தவர்?

(A) மயிலை சீனி.வேங்கடசாமி (B) ப.ஜீவானந்தம்

(C) பாரதிதாசன் (D) கி.வா.ஜகந்நாதர்

71. 'பூவிருந்தவல்லி' என்ற ஊரின் மரூஉவை தேர்க.

(A) பூந்தர் தோட்டம் (B) பூவிருத்தம் (C) பூந்தமல்லி (D) பூவல்லி

72. உவமைத் தொடருக்கு பொருத்தமான பொருள் தேர்க ‘கடலில் கரைத்த பெருங்காயம் போல’

(A) முயற்சின்மை (B) புத்துணர்வு (C) தவிப்பு (D) பயனற்றது

73. பொருத்துக.

| பேச்சு வழக்கு | - | எழுத்து வழக்கு | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) வேசடையாக | - | 1) தாத்தா | (A) | 2 | 4 | 1 | 3 |
| b) ஏச்சு | - | 2) சற்றுக்கோபமாக | (B) | 3 | 2 | 1 | 4 |
| c) உப்பா | - | 3) படித்துறை | (C) | 4 | 2 | 1 | 3 |
| d) கடவு | - | 4) திட்டு | (D) | 3 | 2 | 4 | 1 |

74. தவறான ஒன்றைத் தேர்க.

(A) நகை - நகு+ஐ (B) மருட்கை - மருள்+கை

(C) வெகுளி-வெகுள் +இ (D) தொல்நெறி - தொல்+நெறி

75. பொருள் வேறுபாடு அறிக.

| | ஆள் | ஆழ் | ஆல் |
|---|---|---|---|
| (A) | தடி | முழுகு | ஆலமரம் |
| (B) | கலப்பை | தடி | மான் |
| (C) | உள்ளுதல் | முழுகு | ஆலமரம் |
| (D) | பகல் | மலர் | சொல் |

76. பொருள் வேறுபாடு அறிதல்.

துலை - துளை

(A) சம்பளம் - நோய் (B) தெய்வம் - பசு

(C) கோள் - ஓசை (D) தராசு - துவாரம்

77. மறைபொருள் - என்ற பொருளுக்குரிய உவமைத்தொடர் எது?

(A) நெருப்பில் இட்ட மெழுகு போல (B) இலைமறை காய் போல

(C) குன்றின்மேலிட்ட விளக்கு போல (D) கல்மேல் எழுத்து போல

78. மரபுப்பிழை நீங்கியத் தொடரைத் தேர்க.

(A) குமரன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான். (B) குமரன் சோறு உண்டு பால் குடித்தான்.

(C) குமரன் சோறு உண்டு பால் பருகினான். (D) குமரன் சோறு சாப்பிட்டுப் பால் அருந்தினான்.

79. தவறான தொகை மரபைத் தேர்க.

(A) கோழி - பண்ணை (B) ஆடு - தொழுவம் (C) குதிரை - லாயம் (D) கரையான் - புற்று

80. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) மருட்கை | - | 1) மகிழ்ச்சி | (A) | 4 | 3 | 2 | 1 |
| b) இளிவரல் | - | 2) சினம் | (B) | 2 | 1 | 4 | 3 |
| c) வெகுளி | - | 3) சிறுமை | (C) | 4 | 3 | 2 | 1 |
| d) உவகை | - | 4) வியப்பு | (D) | 2 | 3 | 1 | 4 |

81. வாக்கியம் ஒன்று :- "சந்து" என்ற சொல்லின் பொருள் "சந்தனப் பெட்டி" ஆகும்.

வாக்கியம் இரண்டு :- "சந்தப் பேழை" என்ற சொல்லின் பொருள் "சந்தனமரம்" ஆகும்.

(A) வாக்கியம் ஒன்று மட்டும் சரி (B) வாக்கியம் இரண்டு மட்டும் சரி

(C) வாக்கியம் இரண்டும் சரி (D) வாக்கியம் இரண்டும் தவறு

82. "கோளி" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) பறவை (B) சேவல் (C) அரசமரம் (D) ஆச்சாமரம்

83. "கோதில்" என்ற சொல்லின் எதிர்ச்சொல் காண்க?

(A) குற்றமற்ற (B) குற்றம் (C) நன்மை (D) தீமை

84. தவறான இணையைக் காண்க.

(A) கோது – குற்றம் (B) சலம் – நீர் (C) சாந்தம் – சந்தனம் (D) சான்ற – மிகுந்த

85. பொருத்துக.

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) சரம் | - | 1) சிங்கம் | (A) | 5 | 2 | 3 | 1 | 4 |
| b) குருசு | - | 2) ஊர் | (B) | 5 | 3 | 2 | 1 | 4 |
| c) குறும்பு | - | 3) தேன் | (C) | 4 | 5 | 2 | 1 | 3 |
| d) கேசரி | - | 4) அம்பு | (D) | 4 | 5 | 2 | 3 | 1 |
| e) கொங்கு | - | 5) சிலுவை | | | | | | |

86. "சம்பு" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) சங்கு (B) நாவல் (C) இதழ் (D) நம்பிக்கை

87. சரியான இணையைக் காண்க.

(A) சாமம் – பகல் பொழுது (B) சான்ற – குறைந்த

(C) சடிலம் – சடை (D) கோலம் – அலகு

88. சரியான இணையைக் காண்க.

(A) கேழல் – கேட்டல் (B) குந்த – மணம்

(C) குரிசில் – தலைவன் (D) சிட்டம் – இழிவு

89. "சீத்தையர்" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) போலிப்புலவர் (B) மேலானவர் (C) சிறந்தது (D) வானவர்

90. பொருத்துக.

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) சாகாடு | - | 1) சந்தர்ப்பம் | (A) | 3 | 5 | 4 | 2 | 1 |
| b) சாக்காடு | - | 2) மரணம் | (B) | 3 | 2 | 4 | 5 | 1 |
| c) சிறை | - | 3) வண்டு | (C) | 4 | 2 | 5 | 3 | 1 |
| d) சீரிடம் | - | 4) வண்டி | (D) | 4 | 2 | 5 | 1 | 3 |
| e) சுரும்பு | - | 5) ஏரியின் கரை | | | | | | |

91. சரியான இணையைக் காண்க.

1. Selvas - மழைக்காடுகள் 2. Atlas - நிலத்தோற்றம்
3. Mural - சுவரோவியம் 4. Hazard - பேரிடர் 5. Trembling - நடுக்கம்

(A) 1, 3, 5 சரி (B) 3, 5 சரி (C) 2, 4, 5 சரி (D) 2, 3, 4 சரி

92. “Thematic Map” என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க.

(A) வரைப்படம் (B) நிலத்தோற்ற வரைபடம்
(C) கருத்துப்படம் (D) மலைத்தோற்ற வரைபடம்

93. “Stringent” என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க.

(A) நேர்த்தியான (B) மிகவும் கடுமையான (C) வரிசையாக (D) இணையாக

94. சரியான இணையைக் காண்க.

1.Sanctum - பாதுகாப்பு 2.Canon - பொது ஒழுங்கு
3.Impetus - உந்துசக்தி 4. Extinguish - இணைத்தல்

(A) 1, 3 சரி (B) 2, 3 சரி (C) 1, 4 சரி (D) 2, 4 சரி

95. பொருத்துக.

a) Ascetic - 1) முக்தி
b) Vestiges - 2) நிலச்சந்தி
c) Salvation - 3) சந்நியாசி
d) Isthmus - 4) நீர்ச்சந்தி
e) Strait - 5) சுவடுகள்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 3 | 5 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 5 | 1 | 2 | 4 |
| (C) | 5 | 3 | 1 | 2 | 4 |
| (D) | 5 | 3 | 4 | 1 | 2 |

96. தவறான இணையைக் காண்க.

(A) Mandatory - கட்டாயம் (B) Chores - பணி
(C) Deteriorate - மோசமடை (D) Spurious - நேர்மையான

97. தவறான இணையைக் காண்க.

(A) Epoch - சகாப்தம் (B) Boulder - எல்லைகள்
(C) Facade - கட்டத்தின் முகப்பு (D) Adherent - பின்பற்றுபவர்

98. “Dagger” என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க.

(A) குறுவாள் (B) ஈட்டி (C) கற்பாறை (D) அம்பு

99. “Execution” என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க.

(A) காலதாமதம் (B) செயல்திறன் (C) ஆராய்தல் (D) அகழ்வாராய்ச்சி

100. “Legend” என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க.

(A) மேன்மையானவர் (B) குறி விளக்கம் (C) மட்டுப்படுத்துதல் (D) திறமையானவர்